பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 27 புதன்கிழமை 12.08.2020 கதிர் 276

இது ரகசியம் அல்ல!

வெளிநாட்டில் இருக்கும் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசி அழைப்பு எடுத்தார். இங்கு நாட்டில் ஊடகவியல் பணியை மேற்கொண்டபோது மாவைசேனாதிராசா உட்பட ஏனைய தமிழ் அரசியல் தலைவர்களுடன் நெருக்கமாக பக்கம் 02

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவகாரம்:

## இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் சஜித்திடம்

### பங்காளிக் கட்சிகள் தீர்மானம்

கொழும்பு, ஓக 12

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக இறுதி முடிவை எடுக்கும் அதிகாரத்தை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமே விட்டுவிட பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு மாவட்டங்களில் பெற்றுக்கொண்ட 47 ஆசனங்களுக்கு மேலதிகமாக தேசியப் பட்டியல் ஊடாக 7 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதற்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக பங்காளிக் கட்சிகள் இடையே பக்கம் 02

## கடத்தப்பட்டார் என்று கூறப்பட்ட யுவதி மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 12

நீர்வேலி வடக்குப் பகுதியில் வானில் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் யுவதி கோப்பாய் பொலிஸாரால் நேற்று மாலை மல்லாகத்தில் மீட்கப்பட்டார்.

நீர்வேலி வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று 4 பேர் கொண்ட கும்பல் 20 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரைக் கடத்திச் பக்கம் 02

## ரணில், சாகல, ருவன் இம்மாதம் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைக்கு அழைப்பு



கொழும்பு, ஓக 12

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன மற்றும் முன்னாள் பக்கம் 02

# போர்க்குற்றச்சாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது!

## கோட்டாவின் சகா சரத் வீரசேகர சண்டித்தனம்



கொழும்பு. ஓக. 12

இறுதிப்போரில் நாம் செய்யாத குற்றமொன்றை செய்ததாகக் கூறி முன்னைய நல்லாட்சியாளர்கள் ஜெனிவாவில் போர்க்குற்றச்சாட்டுகள் என்ற பொய்யான சாட்சியங்களை முன்வைத்தனர். அவற்றை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

–இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். பக்கம் 12

## ஞானசாரருக்கு ஆதரவாக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை வலியுறுத்தி

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் செல்ல இடமளிக்க வேண்டும் எனத் தெரிவித்து முஸ்லிம்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுப் பகல் கொழும்பு – இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக அமைதியான முறையில் நடந்தது.

அம்பாறை – சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் சிலரால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## தமிழ்க் கூட்டமைப்பினர் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்

### பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஓக 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர். எனவே, தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு நாம் தயாரில்லை. எந்தவொரு நிபந்தனைகளையும் ஏற்கவும் மாட்டோம்.

– இவ்வாறு திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 02

## புதிய நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கின்றார் பிள்ளையான்

கொழும்பு, ஓக 12

எதிர்வரும் 20ஆம் திகதி புதிய நாடாளுமன்ற அமர்வில், சிறையிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கலந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது என அக்கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

கட்சியின் மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;–

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பக்கம் 02

## மேர்வினின் மகன் மாலக நேற்று கைது

கொலை அச்சுறுத்தல் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக 12

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக் பக்கம் 02

## ஞானசார தேரர் எம்பியாவதில் சிக்கல் நிலை!

### கட்சிச் செயலரைக் காணவில்லை

கொழும்பு, ஓக.12

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் வெதனியகம விமல திஸ்ஸ தேரர் காணாமல் போனார் எனக் கூறப்படும் நிலையில் ஞானசார தேரரின் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடாடியவர் அவர்.

இப்போது மாவை சேனாதிராசாவுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்படவில்லை என்ற ரீதியில் சர்ச்சை வெடித்திருக்கின்றது என்ற கவலை – சீற்றம் – அவருக்கு. அந்த முரண்பாட்டால் தமிழரசே இரண்டாகப் பிளந்து விடும் என்ற விசனத்தில் அவர் பேசினார்.

*"ஆரம்பத்திலை ஆள்கள் சாகச் சாக அதிலை வந்த தேசியப் பட்டியலிலைதான் உவர் மாவையர் எம்.பியானவர். (அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் இருவரும் படுகொலை செய்யப்பட்ட போது அந்த இடங்களுக்குத் தேசியப் பட்டியல் மூலம் இரு தடவையும் எம்.பியானவர் மாவை). இப்ப கட்சியைச் சாகடிச்சு எண்டாலும் எம்.பி. பதவி எடுக்க நிற்கிறார் போல...!"* – என்று சீறினார்.

நான் அவரை அடக்கினேன்.

*"அப்படியல்ல, தேசியப்பட்டியல் கொடுத்த விதம்தான் பிரச்சினை. கட்சியின் தலைவருக்கும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் தெரியாமல் முடிவு எடுத்து அறிவித்ததுதான் தவறு எண்டு எல்லோரும் குற்றம் சுமத்துகினம்."* – என்று நான் விவரித்தேன்.

*"யாழ்ப்பாணத்துக்கு மூன்று எம்.பிக்கள் தமிழ்க் கூட்டமைப்பில் இருக்கும் போது பிறகு ஏன் அதை மாவையருக்குக் கொடுக்க வேணும்?"* – என்று மீண்டும் பிறாண்டினார் அவர்.

நான் மெல்ல விடயத்தை அவருக்கு விளக்கினேன்.

*"தமிழ்க் கூட்டமைப்பின் மற்ற இரண்டு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் எம்.பிக்களாக இருக்கையில் தமிழரசுத் தலைவரும் இருக்கத்தான் வேணும் எண்டு சில பேர் எதிர்பார்க்கினம்... அது தான்..."* – என்று நான் சமாளித்தேன்.

*"அப்படி எண்டால் போன தடவை உந்தத் தத்துவம் சுரேஷ் பிறேமச்சந்திரன் விசயத்திலை என்னவாயிற்று...? பங்காளிக் கட்சிகளிலை மாவை, சித்தர், செல்வம் எல்லாம் எம்.பியான போது மற்றைய தலைவரான சுரேஷ் மாத்திரம் தெரிவு செய்யப்படேல்ல. அப்ப உங்களுக்கு ஒன்றுக்கு, ரெண்டு தேசியப் பட்டியல் கிடைச்சுது...சுரேஷை அப்ப ஏன் வெட்டி விட்டீங்கள்...? இப்ப ஏன் அதுக்கு மாறாக மாவையருக்குக் கேட்கின்றியள்...?"* – என்று பாய்ந்தார் அவர்.

எனக்குப் பதில் கூற விடயம் இருக்கவில்லை.

அந்தத் தேசியப் பட்டியல் ஆசனத்தை அம்பாறைக்குக் கொடுத்தது நியாயம் என்று வாதம் பிளந்தார் அவர்.

*"1948 முதல் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தவறாது வந்த படி இருக்கின்றார். இந்த முறைதான் அது அடிபட்டுப் போயிருக்கின்றது. அதிலும் கூட ஒரு விசயம் நடந்தது உங்களுக்குத் தெரியுமோ?"* – என்று கேட்டார் அவர்.

நான் *"என்ன விடயம்?"* – என்று வினவினேன்.

*"அம்பாறையில் தமிழ் வாக்குகளைப் பிளந்தால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் உடையும் எண்டது ராஜபக்ஷக்களுக்குத் தெரியும். தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் தாமே என்று கூட்டமைப்புக் கூறுவது ராஜபக்ஷக்களுக்கு எரிச்சல். மாவட்டம், மாவட்டமாகக் கூட்டமைப்பை விழுத்த ராஜபக்ஷக்கள் வியூகம் வகுத்தனர். அதில் ஒன்றுதான் அம்பாறைக்கு கருணாவை அனுப்பி தமிழ் வாக்குகளைப் பிளந்த நடவடிக்கை. கருணா மட்டக்களப்பில் களமிறங்கத்தான் விரும்பினார். ஆனால் மஹிந்தர்தான் கூப்பிட்டு அம்பாறையில் போட்டியிடச் சொன்னார். 'அம்பாறையில் போட்டியிட்டுத் தோற்றாலும் பரவாயில்லை. கூட்டமைப்பை அங்கு வீழ்த்துங்கள். இங்கு தேசியப் பட்டியலில் இடம் தருவேன்' என்று உறுதி கூறிக் கருணாவை மஹிந்தர் அனுப்பி வைத்தார். ஆனால் கருணாவுக்கும் அது தோல்விதான்."* – என்றார் என் நண்பர்.

*"மஹிந்தர் சொன்னபடி கருணா கூட்டமைப்பைத் தோற்கடித்து விட்டார்தானே...! பிறகென்ன தோல்வி?"* – என்று நான் கேட்டேன்.

*"ஆனால் கருணாவுக்கு உறுதியளித்த படி தேசியப் பட்டியலை மஹிந்தர் வழங்கவில்லை. வழங்க முடியவில்லை. அதற்குக் காரணம் அம்பாறையில் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கும் கலையரசன்தான்."* – என்றார் அவர்.

எனக்கு விடயம் புதிதாக இருந்தது. என்ன, ஏது என்று விசாரித்தேன்.

*"அம்பாறையில் கூட்டமைப்பின் வெற்றியை கருணா முறியடித்தால் அவருக்கு ஒரு தேசியப் பட்டியல் இடத்தை வழங்குவதில் மஹிந்தர் உறுதியாகத்தான் இருந்தார். ஆனால் ஒரு கலந்துரையாடலில் வாய் தடுமாறி நாங்கள் ஆனையிறவில் ஒரே நாளில் மூவாயிரம், நலாயிரம் இராணுவத்தைக் கொன்றோம் என்ற கதையை கருணா கூறப்போக, அது தெற்கில் பெரிய விவகாரமாக உருவெடுத்தது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட கருணாவுக்கு தேசியப்பட்டியல் கொடுக்க முயன்றால் – அதுவும் மொட்டுக் கட்சியில் கொடுக்க முயன்றால் – குழப்பம் ஏதும் நேரும் என்று கருதி மஹிந்தர் கருணாவுக்கு இடமளிக்கும் திட்டத்தைக் கைவிட்டு விட்டார் என்று தெரிகிறது. இதுவும் கலையரசனால் வந்ததுதான். நாவிதன்வெளிப் பிரதேச சபையின் தவிசாளராக இருந்த கலையரசன் கருணாவை விமர்சிக்கப் போக, அதற்குப் பதிலளிக்கிறேன் என்று வெளிகிட்டு பேசிய போதுதான் அந்த ஆனையிறவு இராணுவ முகாம் அழிப்புப் பற்றிப் பீற்றித் தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்டார் கருணா. கடைசியில் அம்பாறையில் 'சீற்' கருணாவுக்கும் இல்லை, கூட்டமைப்புக்கும் இல்லை. ஆனால் அப்படி இல்லாமல் பண்ணினால் இடம் தருவேன் என்று உறுதியளித்த மஹிந்தரினால் கருணாவுக்கு எம்.பி. பதவி வழங்க முடியவில்லை. என்றாலும் கூட்டமைப்பு அம்பாறைக்கு தனது தேசிப் பட்டியலை வழங்கித் தனது தாராளத்தைக் காட்டியுள்ளது. கிழக்கு மக்கள் மீது – குறிப்பாக அம்பாறையில் மற்றைய இரு இனங்களின் அழுத்தத்தினால் துவண்டு போயிருக்கும் தமது சகோதரங்கள் மீது – தனது பற்றுதியைக் காட்டியிருக்கின்றது. இது மெச்சத்தக்க செயல். இந்த நல்ல நடவடிக்கைக்கு ஆப்படிக்க முயலும் எவர் எண்டாலும் – அது மாவையர் எண்டாலும் – வரலாறு மன்னிக்காது."* – என்று முழுங்கினார் அவர்.

அந்த ஊடக நண்பர் சீற்றத்துடன் கூறிய விடயத்தில் ஏதோ ஆழமான அர்த்தம் இருப்பதாகவே எனக்குப்பட்டது. இது நிச்சயம் என்னிலும் விட, எனது அந்த நண்பரை விட, மாவையருக்கு நன்கு புரியும். ஏனெனில் அம்பாறையைச் சேர்ந்த கலையரசனை விட, அம்பாறையை நன்கு தெரிந்தவர், புரிந்தவர், அப்பிரதேசம் மீது பற்று வைத்தவர் மாவையர். ஆனால் மாவையரைச் சுற்றி நின்று அவரைத் திசை திருப்ப முயலும் தரப்புகளுக்கு இது விளங்காது. அவர்களுக்கு விளங்கினால் நல்லது...!

–மின்னல்–

## தமிழ்க் கூட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நிபந்தனை அடிப்படையில் எம்முடன் எவரும் அரசியல் நடத்த முடியாது. கூட்டமைப்பின் நிபந்தனைகளையும் ஏற்க மாட்டோம்.

எமது ஆட்சியில்தான் யாழ்ப்பாணத்துக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. யாழ். தேவியை ராஜபக்ஷ அரசே தலைமன்னார் வரை கொண்டு சென்றது. ஆனாலும், ஐக்கிய தேசியக் கட்சியையே கூட்டமைப்பு ஆதரித்தது. ஐ.தே.க. ஆட்சியைப் பாதுகாத்தது. வரவு – செலவுத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்களின் ஏக ப்பிரதிநிதிகள் அல்லர். கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி உட்பட உள்ளிட்ட கோரிக்கைகளை ஏற்க முடியாது. அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டிய தேவையும் எழவில்லை.

வடக்குக்கு மாகாண சபையை வழங்கினோம். அதனூடாகப் பயன்பெறவில்லை. முதல் தடவையாக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. அடுத்த முறை நாம் நிச்சயம் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவோம்.

கூட்டமைப்பு ஊடாக அல்லாதது வடக்கு, கிழக்கில் எம்மால் தனித்து இயங்கி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும் – என்றார்.

## இறுதி முடிவெடுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாற்றுக் கருத்துக்கள் நிலவின. இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகள் மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கிடையே மாற்றுக் கருத்துக்கள் நிலவிய போதிலும் இறுதியாக சகலரும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக யாரை நியமிப்பது என்ற இறுதி முடிவை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னெடுக்க வேண்டும் எனவும், எந்தவித முரண்பாடுகளும் இல்லாது இதற்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் எனவும் கட்சியின் பங்காளிக் கட்சிகள் எதிர்பார்த்துள்ளன.

## ரணில், சாகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை, எதிர்வரும் வாரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்ய அவர்கள் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று குறித்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவின் முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப்போதைய இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவை எதிர்வரும் 18ஆம் திகதி, குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணை பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்த முன்னறிவிப்பு புலனாய்வுத் தகவல்களை முதலில் பெற்ற அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, நேற்று எட்டாவது நாளாக, ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தார். இதன்போது ஊடகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மேர்வினின் மகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குட்பட்ட பகுதியில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரிடம் பலாத்காரமாக ரூபா ஒரு இலட்சம் பணத்தைப் பெற முயற்சி செய்தமை மற்றும் அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் மாலக சில்வா கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜுலை 16ஆம் திகதி தலங்கம பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, நேற்றிரவு 8.40 மணியளவில், கொழும்பு 05, உத்தியான வீதி பிரதேசத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து, மாலக சில்வா (வயது 43) கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை இன்று கடுவல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த, தலங்கம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக் கத்தில்...)

## புதிய நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசியப் பட்டியலை உறுதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கட்சிச் செயலாளரை கண்டறிய உதவுமாறு கட்சி உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் எங்கள் மக்கள் சக்தி கட்சி உறுப்பினர் ஆனந்த சாகர தேரர் பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவிக்கையில் –

ஞானசார தேரர் நாடாளுமன்றம் செல்வதை தடுப்பதற்கு சர்வதேச மற்றும் உள்ளக மட்டத்தில் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் வெதனியகம விமல திஸ்ஸ தேரர் காணாமற்போயுள்ளார். இதன்காரணமாக தேசியப் பட்டியல் விவகாரத்தில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

எங்கள் மக்கள் சக்தி கட்சி 17 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டு 67 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளோம். எமது கட்சிக்கு தேசிய பட்டியல் ஊடாக ஒரு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு ஆசனத்தை ஞானசார தேரருக்கு வழங்க வேண்டும் என கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்தத நிலையில் கட்சியின் செயலாளர் காணாமல் போயுள்ளமை குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது – என்றார்.

## புதிய நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முக்கிய செய்தியை எடுத்துக்கூறியுள்ளது.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மக்கள் மிக வேதனையை அனுபவித்துள்ளனர். அத்தோடு அபிவிருத்தியிலும் பெரும் பின்னடைவையும் அடைந்துள்ளனர்.

ஆகவே, இம்முறை மக்கள் வழங்கியிருக்கும் செய்தியானது – கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியும் தனித்துவமும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதேயாகும்.

ஏனைய கட்சியினருக்கும் அழைப்பு

எனவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவானவர்கள் வெவ்வேறுபட்ட கட்சிகளைச் சாந்தவர்களாக இருந்தாலும், அரசியல் என்பது மக்களுக்காகவே தவிர தாங்கள் சார்ந்த கட்சிக்காகவோ, அரசியல் இருப்புக்காகவோ அல்ல என்பதனைப் புரிந்துகொண்டு அனைத்து உறுப்பினர்களும் ஒரே கூரையின் கீழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக பயணிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பகிரங்கமாக அழைப்பு விடுகின்றது.

அதேபோன்று, தமிழர்களின் வசமிருந்த கிழக்கு மாகாண சபை தமிழ் மக்களிடம் வரவேண்டும் என்று கிழக்கு மாகாண மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த மாவட்டங்களின் தமிழ் மக்களை நடுக்கடலில் விட்டுவிட முடியாது.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும். தமிழர்கள் ஆண்ட சபையை மீண்டும் தமிழர்கள் ஆள்வதற்காகப் பிள்ளையான் தலைமைத்துவத்தை ஏற்பதற்குத் தயாராக உள்ளார்.

தடுப்புக் காவலில் இருந்து, நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் எதிர்வரும் 20ஆம் திகதி தொடங்கவுள்ள நாடாளுமன்ற அமர்வுக்கு அவர் செல்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது . நாடாளுமன்றம் சென்ற பிற்பாடே ஏனைய நடைமுறைகள் முன்னெடுக்கப்படும். மிக விரைவில் சந்திரகாந்தன் சட்டத்துக்கு முன் நிரபராதியாக வெளியில் வருவார் – என்றார்.

## கடத்தப்பட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றது என அவரது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் மல்லாகம் பகுதியில் வைத்து நேற்று மாலை யுவதியையும் அவரைக் கூட்டிச் சென்ற பிரதான சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் கடத்தப்பட்ட தாகக்கூறப்படும் யுவதி குறித்த இளைஞனை நீண்ட நாள்களாகக் காதலித்து வந்தார் என்றும், பெற்றோர் யுவதிக்கு திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தவேளை யுவதி வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இளைஞன் யுவதியை கூட்டிக் கொண்டு சென்றுள்ளார் எனவும் தெரியவந்தது.

யுவதியின் பெற்றோர் வேண்டுமென்றே தன் மீது குற்றம் சுமத்தி உள்ளனர் எனவும் பொலிஸ் விசாரணையில் அந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யுவதியையும் இளைஞனையும் நாளை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் குருணாகல் மக்களிடம் மஹிந்தர் தெரிவிப்பு!



நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தில் சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டம் முறையாக செயற்படுத்தப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் வெற்றி பெற்ற அவர், வரலாற்றுச் சாதனையையும் படைத்திருக்கிறார். இந்நிலையில் அம்மாவட்ட மக்களுக்கு நேற்று முன்தினம் அவர் நேரில் சென்று நன்றி தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் குருநாகலை மாவட்டத்தில் வேட்பாளராக போட்டியிட்ட எனக்கு 5,27,364 விருப்பு வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இலங்கை அரசியல் வரலாற்றில் விருப்பு வாக்கு முறைமையில் முதல் தடவையாக இவ்வாறானதொரு மாற்றத்தை ஏற்படுத்திய குருநாகல் மாவட்ட மக்கள் என் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு என்றும் கடன்பட்டுள்ளேன்.

இந்த வெற்றியை பெறுவதற்கு உதவி செய்த பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட ஒருங்கினைப்பார்கள், ஏனைய வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் பெற்று முடிந்த பொதுத்தேர்தல் எமது அரசியல் வரலாற்றில் 9ஆவது பொதுத்தேர்தல். 2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் பாரிய சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர் கொண்டுள்ள நிலையில் குருநாகலை மாவட்டத்தில் போட்டியிட்டேன். முதல் தடவையாக அப்பிரதேச மக்கள் என்மீது நம்பிக்கை கொண்டு ஆதரவு வழங்கினார்கள். இம்முறை விருப்பு வாக்குகளின் ஊடாக ஆதரவை பன்மடங்கு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்கிய மக்கள் முகப்பு புத்தகத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டிய விதம், வாக்குறுதிகள் ஆகியவை தொடர்பில் கருத்துக்களை பதிவேற்றம் செய்துள்ளமை கவனத்திற்குரியது. மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்போம். மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படும் போது மக்களால் நிராகரிக்கப்பட வேண்டிய நிலைமை தோற்றம் பெறும்.

மக்கள் மத்தியில் முன்வைத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தில் சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டம் முழுமையாக செயற்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் தொடர்ந்து எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். - என்றார்.

## இந்தியாவில் இருந்து வந்து யாழ்.சிறையில் இருந்தவர் சாவு

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவில் இருந்து கடல் வழியாக வந்து யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஈழ அகதி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் வல்வெட்டித்துறைப் பகுதியை சேர்ந்த சத்தியமூர்த்தி பாலகிருஷ்னன் என்பவரே உயிரிழந்தார்.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக வட கடல் பகுதிக்குள் வந்த ஈழ அகதிகள் 4 பேர் யாழ் சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அவர்களில் ஒருவருக்கு நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டார்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டவர் நேற்று மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவ்வாறு உயிரிழந்தவர் சிறுநீரக செயலிழப்பு காரணமாகவே உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கூட்டமைப்பு தொடர்பில் விழிப்புணர்வு அவசியம்

### ஜனா எம்.பி. வலியுறுத்து

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்பில், கிராமிய மட்டத்தில் பாரிய விழிப்புணர்வுகளை முன்னெடுக்கும் போதுதான், எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

துறைநீலாவணையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்காளிக் கட்சியாக இருக்கின்றதே தவிர, அதற்கென்று ஒரு கட்டமைப்போ நிர்வாக ஒழுங்கமைப்போ இல்லை.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்களிக் கட்சிகளாக இருப்பதால் பதிவுசெய்யப்பட்டு, கிராமிய மட்டங்களில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செயற்படாமல் இருக்குமானால், எதிர்காலத்தில் பாரிய பின்னடைவுகளைக் கூட்டமைப்பு சந்திக்க நேரிடும்.

கட்சி என்பதற்கு அப்பால், மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 04 தமிழ்ப் பிரதிநிதிகளும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைந்து செயற்படுகின்ற போதுதான், மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்லிணக்கத்துடன், முழுமையான அபிவிருத்திகளைச் செய்ய முடியும்.

தமிழ் மக்களின் உரிமை என்றவிடயத்தில் முதன்மைப்படுத்தியதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு இருந்து வந்தமையால், அபிவிருத்தி விடயத்தில், தமிழ்ப் பகுதிகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளன. இதனால் எமது பகுதிகளில் உரிமையுடன் கூடிய அபிவிருத்திகளை முன்னெடுக்கவேண்டிய தேவை இருக்கின்றது - என்றார்.

## குருநாகல் ஸ்தம்பிதம்

குருநாகல் மாநகரசபையின் சகல ஊழியர்களுக்கும் கடமைக்கு சம்கமளிக்காத நிலையில் நேற்று மாநகரசபையின் செயற்பாடுகள் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

குருநாகல் மாநகரசபையின் உயர் அதிகாரி முதல் கடைநிலை ஊழியர் வரையான சக லரும் சுகயீன விடுமுறை அறிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, நகர தூய்மைப்படுத்தல், குப்பை சேகரிப்பு, தீயணைப்பு பிரிவு உள்ளிட்ட மாநாகரசபையினால் வழங்கப்படும் சகல சேவைகளும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குருநாகல் பொதுச் சந்தை மற்றும் பொதுநூலகம் என்பன மூடப்பட்டிருந்த நிலையில், வர்த்தகர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, முற்பகல் 11 மணிக்கு சந்தை திறக்கப்பட்டதாகர் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

பொரளை பொலிஸ் பிரிவிட்குட்பட்ட டி 20 தோட்டப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றில் 380 ஹெரோயின் பாக்கெட்டுகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஹெரோயின் பாக்கெட்டுகளினுள் 15 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதுடைய பேஸ்லைன் மாவத்தை, பொரளை பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான பெண் இன்று மாளி காகந்த நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## அங்கொட லொக்காவின் சகாவை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்

கொழும்பு, ஓகஸ்ட் 12

தமிழகத்தில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் பிரபல பாதாள உலகத்தலைவர் அங்கொட லொக்காவுடைய குழுவின் பிரதான துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சொல்டாஎன்றஅசிதஹேம திலக என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெலிவிட, முல்லேரியவை பகுதியில் வைத்து அவர் சுட்டு கொல்லப்பட்டுள்ளார்.

பொலிஸாரை நோக்கி கைக்குண்டு ஒன்றை வீச முற்பட்ட போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யாழில் அங்கஜன் இராமநாதன் பெற்றது வரலாற்று வெற்றி என்கின்றார் மைத்திரி





கொழும்பு, ஓகஸ்ட் 12

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் யாழில் போட்டியிட்டு, அங்கஜன் இராமநாதன் பதிவு செய்தது வரலாற்று வெற்றியாகுமென முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் வெற்றி தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்விடயத்தினை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் கைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு யாழ். மாவட்ட மக்கள் மிகச் சிறந்த வரலாற்று வெற்றியினைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இந்த வெற்றியினைப் பெற்றுக் கொடுத்த யாழ். மாவட்ட மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினது சார்பில் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## என்ன செய்யப் போகிறார் மாவையர்?

தமிழர்களின் வாக்குகள் சிதறுவதனால் என்ன ஆபத்து நேரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தேர்தல் சமயத்தில் திரும்பத் திரும்ப எச்சரித்தனரோ, அந்த ஆபத்து நேர்த்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுத்துத் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் பிற தரப்புகளுக்கு இந்த வாக்குகள் விழுந்திருக்குமானால் அது அவ்வளவு சர்ச்சைக்குரியதாக – தமிழ்த் தேசிய மறுப்பாக – இருந்திருக்காது.

இம்முறை தமிழர்களின் வாக்குகள் சிதறியமையினால் – தமிழ்த் தேசியம் பேசும் அல்லது வலியுறுத்தும் தரப்புகளை விலகியும் சென்றமையினால் – தென்னிலங்கைச் சிங்களம் புதிய கதை பேசமுற்படுகின்றது.

*"தமிழ் மக்களின் பிரச்சினை குறித்துத் தமிழ்க் கூட்டமைப்புடன் இனிப் பேசவே மாட்டோம்"* – என்று ராஜபக்ஷ அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

*"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது. எங்களுடன் இணைந்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுடனேயே நாங்கள் அது குறித்துப் பேசுவோம்."* – என்று அரசின் முக்கிய பிரமுகரான தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் நாங்களே, நாங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு இருக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு பிரிவினை வாதம் பேசிக் கொண்டிருந்த தமிழ்க் கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே நிராகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாக்கு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

*"தற்போது அரசில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். அவர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்குவோம்."* – என்று கூறியிருக்கின்றார் இன்று முக்கிய அமைச்சர் பொறுப்பை ஏற்கவிருக்கும் தினேஷ் குணவர்த்தன.

அவரின் கருத்துப்படி பார்த்தால் இனி ராஜபக்ஷக்கள் அரசு தமிழர்களுக்கான தீர்வு குறித்து டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவரது ஈ.பி.டி.பி. உறுப்பினர், அங்கஜன் இராமநாதன், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாழேந்திரன் போன்ற ஐவருடன் தான் பேசப் போகின்றது.

உரிமைக்காய் போராடுவோரை விடுத்து, உரிமைகளின் பேரில் சகாயம், சலுகை, யாசகம் கோருவோருடன் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது இலகுவானது என்று எண்ணுகின்றார்கள் போலும் அரசுத் தரப்பினர்.

தேர்தல் பின்னடைவுகளினால் இப்படித் துவண்டுபோய்த் தமிழினம் சுருண்டு கிடக்கையில் அதில் தமது பதவி ஆசையை நிறைவு செய்யவும் தங்களின் அரசியல் இலக்குகளை எட்டவும் சில தரப்புகள் திட்டமிடுகின்றன.

தாங்கள் வகுத்த அரசியல் வியூகத்தில் தமிழ்க் கூட்டமைப்பு சறுக்கி விழுந்து விட்டது என மொட்டுக் கட்சிகளின் வெற்றிக்குப்பின்னால் திட்டம் வகுத்துச் செயற்பட்ட பிரதான சூத்திரதாரியான பஸில் ராஜபக்ஷவும் கூறியிருக்கின்றார்.

அது உண்மையோ, பொய்யோ, தெரியவில்லை. ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகளின் பின்னர் தமிழர் தேசிய நிலைப்பாட்டை – குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை – சிதறடிக்கத் தமிழர் தரப்புக்குள்ளேயே முயற்சிகள் முனைப்புடன் எடுக்கப்பட்டிருக்கின்றமை வெளிப்பட்டிருக்கின்றது.

இந்த மோதல்களின் பெறுபேறு கூட்டமைப்புக்குள்ளான பிளவாக மட்டும் முடியாது. கூட்டமைப்பு வடக்கு, கிழக்காகவும் பிளவுபடும் பேராபத்து உள்ளது.

காரணம் யாராகவும் இருந்து விட்டுப் போகட்டும். நியாயம் எதுவாகவும் இருந்து விட்டுப் போகட்டும். இந்த மோதலின் பெறுபேறும் எப்படியாகவும் இருந்து விட்டும் போகட்டும்.

ஆனால், வரலாறு ஒன்றை மட்டும்தான் கூறும். தேர்தலில் தோற்று ஆறாம் இடத்துக்குத் தள்ளப்பட்ட கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தாம் மீளவும் எம்.பியாகி நாடாளுமன்றத்துக்குள் புகவேண்டும் என்ற பேராசையால் கூட்டமைப்பைப் பிளக்க இடம் விட்டார் என்பதுதான் அது.

இது விடயத்தில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தன்னுடைய அரசியல் முதிர்ச்சியையும், தமிழரின் எதிர்கால நலன் குறித்த தமது சிரத்தையையும் தெளிவுபடுத்தி விட்டார்.

ஆனால், புளொட் தலைவர் சித்தார்த்தனிடம் இருந்து உறுதியான நிலைப்பாடு எதுவும் வெளிப்படவில்லை. இனித்தான் வருமோ தெரியாது.

தமிழ்க் கூட்டமைப்பை எப்படியும் சிதைத்துச் சிதறப் பண்ணவேண்டும் என்று கங்கணம் கட்டிச் செயற்படும் தரப்புகள் எல்லாம் ஆரம்பத்தில் சசிகலா இரவிராஜுக்காக நீலிக் கண்ணீர் வடித்தமை போல, இப்போது மாவை சேனாதிராசாவுக்காக முதலைக் கண்ணீர் வடிக்க முற்பட்டிருக்கின்றன.

என்ன செய்யப் போகின்றார் மாவையர்? நீதியை நிலைநாட்டுகிறேன் என்ற சாக்கில் கட்சியை – கூட்டமைப்பை – உடைப்பதற்கு கால்கோள் இடப்போகின்றாரா? அல்லது பிரிந்து, பிளவுண்டு கிடக்கும் கட்சியை ஐக்கியப்படுத்தப் போகின்றரா? அடுத்து வரும் வாரங்கள் நிலைமையைத் தெளிவாக்கும்.

# மீண்டும் தவிசாளராக பதவியேற்ற கலையரசன் அதன் பின்னர் மீள இராஜினாமாச் செய்கிறார்

## நாவிதன்வெளி பிரதேசசபையில் அவருக்கு வரவேற்பு





(காரைதீவு நிருபர் சகா)

கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக தவிசாளர் பதவியிலிருந்து தற்காலிகமாக லீவு பெற்றிருந்த நாவிதன் வெளிப்பிரதேச சபைத் தவிசாளர் தவராசா கலையரசன் நேற்றுமுன்தினம் திங்களன்று சபைக்குச் சென்று தவிசாளர் பதவியை மீண்டும் பெற்றுள்ளார். விரைவில் உள்ளூராட்சிமன்ற சட்டதிட்டங்களுக்கமைவாக தனத தவிசாளர் பதவியை அவர் இராஜினாமாச் செய்வார் எனத் தெரிகிறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சர்ச்சைக்கு மத்தியில் நியமிக்கப்பட்ட நாவிதன் வெளிபிரதேசசபைத் தவிசாளர் கலையரசனின் பெயர் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

தேர்தலுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர் பிரதேசசபைக்குச் சென்று தற்காலிகமாக லீவுபெற்றிருந்த தவிசாளர் பதவியை மீண்டும் ஒப்பமிட்டுப் பெற்றுக் கொண்டார்.

அங்கு சென்ற கலையரசனுக்கு பிரதேச சபை ஊழியர்கள் மாலை அணிவித்து பெரு வரவேற்பளித்தனர். பதில் தவிசாளராக விருந்த ஏ.சமட் செயலாளர் எ.றஹீம் உள்ளிட்ட குழுவினர் அவரை வரவேற்றனர்.

தொடர்ந்து ஊழியர்களுடன் பாராட்டு வைபவமொன்றும் நடாத்தப்பட்டது.

தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நிச்சயிக்கப்பட்டதும் நேற்று சபைக்குச் சென்ற த.கலையரசன் தனது பதவியை இராஜினாமாச்செய்வதற்கான உரிய ஆவணங்களை ஏற்பாடு செய்தார்.

அவரது ஆதரவாளர்கள் அங்கு சென்று வாழ்த்துத் தெரிவித்த வண்ணமுள்ளனர். எதிர்வரும் 20ஆம் திகதி அவர் நாடாளுமன்றில் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார் எனத் தெரிகிறது.

# மத்தளவுக்கு விசேட விமான சேவை!

## ஆரம்பித்தது 'எயார் ஏசியா பிலிப்பைன்ஸ்'

*உலகளாவிய ரீதியில் மாலுமிகளை இடமாற்றுவதற்கு ஏதுவாக இலங்கை காணப்படுவதால் எயார் ஏசியா பிலிப்பைன்ஸ், இலங்கையின் மத்தள விமானநிலையத்துக்கு மாலுமிகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டுக்காக விசேட விமானங்களை இயக்கத் தொடங்கியுள்ளது.*

*அதன்படி முதல் எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் விமானம் 13வெளிநாட்டு மாலுமிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் 1.50 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.*

*எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் இசட் 28161என்ற இந்த விமானம் நேற்று 14 பிலிப்பைன்ஸ் மாலுமிகளுடன் இங்கிருந்து பிற்பகல் 2.15 மணியளவில் பிலிப்பைன்ஸ் நோக்கிப் புறப்பட்டது.*

*கொரோனா வைரஸ் தொற்று நோய்நாட்டுக்குள்கட்டுப்படுத்தப் பட்டுள்ளதால், கப்பல்களின் பாதுகாப்பான செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் குழுவினரை மாற்றுவதற்கு வசதியான இடமாக இலங்கை சர்வதேச கப்பல் சமூகத்தின் மத்தியில் இந்த நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*ஜூன் இறுதி வாரத்திலிருந்து 50 இற்கும் மேற்பட்ட திருப்பி அனுப்புதல் மற்றும் மாலுமிகள் குழு பரிமாற்ற விமானங்கள் மத்தளவிலிருந்து இயக்கப்படுகின்றன.*

*குழு மாற்றங்கள் இலங்கை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

# மான், காட்டெருமைக் கொம்புகளுடன் நுவரெலிய விடுதி முகாமையாளர் கைது



நுவரெலியா பொலிஸாரும், நுவரெலியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின் போது மிருகங்களின் உடற்பாகங்களை வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா அண்டர் பாங்க் பகுதியில் அமைந்துள்ள தனியார் உல்லாச விடுதி ஒன்றில் மான் கொம்பு 18, பாம்புத் தோல் ஒன்று, 15 பதப்படுத்தப்பட்ட வண்ணாத்து பூச்சிகள் அடங்கிய பெட்டிகள், இரண்டு காட்டெருமை கொம்புகள் ஆகியவை இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த உல்லாச விடுதியின் முகாமையாளரே கைது செய்யப்பட்டுள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் சட்டங்களுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்தன விஜேசேக ரவின் உத்தரவின் பேரில் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி வீரசிரி பொலிஸ் உத்தியோகஸ்தர்களான பிரியங்கர (66427) திமன்த (81604) தேசப்பிரிய (56545) ஆகியோரும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்தே இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்படவுள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# கோட்டாவின் வெற்றி இலங்கைக்கு எதிராக சதி செய்வோருக்கு ஏற்பட்ட பாரிய தோல்வி

## ‘மொட்டு’வின் எம்.பி. சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 12

இலங்கை இராணுவம் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்வேன்.

– இவ்வாறு கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையிலான விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ள ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

2021 மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீண்டும் முன்வைக்கப்படும். எனினும், அங்கு நாங்கள் அந்தத் தீர்மானத்துக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டத்துக்கு நாட்டு மக்கள் ஒப்புதல் வழங்கியுள்ளனர். இது ஐ.நாவின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூக்கா மற்றும் இலங்கைக்கு எதிராகச் சதி செய்யும் புலம்பெயர் புலிகள் அமைப்புகளுக்குப் பாரிய தோல்வியாகும் – என்றார்.

# தாயையும் மகளையும் பலியெடுத்த கோர விபத்து

தொம்பே, மல்வான பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணும் அவருடைய மகளும் தொம்பே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

42 வயதுடைய தாயும் அவருடைய 19 வயதுடைய மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

# பொதுத் தேர்தலில் மோசடி!

## ராமநாயக்க பரபரப்புக் குற்றச்சாட்டு



கொழும்பு ஓகஸ்ட் 12

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் மோசடிகள் நடந்திருக்கலாம் என்ற பரபரப்புத் தகவலை ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள பிரபல சிங்கள நடிகர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளே இலங்கையில் ஆட்சிக்கு வரவேண்டிய தலைவர்களைத் தெரிவுசெய்து அதற்கான சூழலையும் உருவாக்கிக் கொடுத்து வருகின்றன எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மிகவும் மோசடிகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் உள்ள இலங்கையில் தேர்தல் என்பது சுதந்திரமானதும், நீதியானதுமாக நடந்தது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை மக்கள் மிகவும் அப்பாவிகள்.

இங்கு ஆட்சியிலிருக்க வேண்டியவர்களைத் தீர்மானிக்கும் சக்தி படைத்தவர்களாக அல்லது அனுசரணையாளர்களாக இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் உள்ளன.

2015ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியப் பிரதமர் மோடியின் வலதுகை என்று அடையாளப்படுத்தப்படும் உயர் அதிகாரி ஒருவர் அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்துக்குத் தனிப்பட்ட விமானத்தில் வந்தபோது நாமல் ராஜபக்ஷ அவரை வரவேற்றார். இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமராகத் தெரிவாவார் என்பதை அவர் தெரிவித்திருந்தார். அது நடந்தது.

இன்று அமெரிக்கப் பிரஜையாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகியுள்ளார். தற்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் இருப்பதால் விரைவில் அமெரிக்காவுடனான எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திடும்.

இந்தியாவுக்குக் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனை வழங்கப்படும். அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்குச் சொந்தமாகும். அதேவேளை, எனது மாமனாரான விஜய குமாரதுங்கவின் காலத்தில் நடந்த தேர்தலில் மூன்று முறை மீள்வாக்கெண்ணல் இடம்பெற்றது. அந்த மூன்று தடவைகளிலும் மூன்று முறையும் மின்வெட்டு ஏற்பட்டு அவருக்கான வாக்குகள் சூறையாடப்பட்டன.

அதேபோல், நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் கடந்த காலங்களில் படுதோல்வியடைந்த அட்மிரல் சரத் வீரசேகர இம்முறை விமல் வீரவன்ஸவை முந்திக்கொண்டு கொழும்பில் முதலிடம் வந்துள்ளார். பிரசன்ன ரணதுங் கவைத் தோல்வியடையச் செய்த கோட்டாபயவின் நண்பர் நாலக்க கொடஹேவா கம்பஹா மாவட்டத்தில் முதலிடம் வென்றார். அவர்கள் கைகளில் பொதுத் தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் முன்னரே முடிவுகள் வந்து கிடைத்தன. வாக்குகளை மீள் எண்ணுமாறும் கேட்டுக் கொண்டனர். மோசடிகள் அரங்கேறியிருக்கலாம் என்பதே எனது கணிப்பாகும் – என்றார்.

# அங்கொட லொக்காவின் கைரேகை மற்றும் மரபணு மாதிரி இந்தியாவுக்கு!

## விடயத்தை உறுதிப்படுத்த அனுப்பி வைப்பு



இலங்கையில் பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த பாதாள உலகத் தலைவனான ‘அங்கொட லொக்கா’ உயிரிழந்துள்ளாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மரபணு பரிசோதனைக்கு தேவையான மாதிரி மற்றும் கைவிரல் அடையாளங்கள் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்திய தூதரகம் ஊடாக இவை, குறித்த விவகாரம் தொடர்பில் தற்போது விசாரணைகளை முன்னெடுக்கும் சி.பி.ஐ. எனப்படும் இந்திய மத்திய குற்றப் புலனாய்வுத் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன இதனைக் கூறினார்.

கொலை, கொள்ளை, கப்பம் கோரல் உள்ளிட்ட பல திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த, பிரபல பாதாள உலகத் தலைவன் அங்கொட லொக்கா என அறியப்படும் மத்துமகே லசந்த சமிந்த பெரேராவின் மரணம் தொடர்பில் 27 வயதான அமானி தான்ஜி , 36 வயதான சட்டத்தரணி சிவகாமி சுந்தரி மற்றும் எஸ்.தியாகேஷ்வரன் ஆகிய மூவர் சந்தேகத்தில் இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அங்கொட லொக்கா நஞ்சூட்டி கொலைச் செய்யப்பட்டு அவரது உடல் எரிக்கப்பட்டு விட்டதாக இலங்கை ஊடகங்கள் வெளியிட்ட தகவலை அடுத்து, இலங்கை பொலிஸார் 2002 ஆம் ஆண்டில் 25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் பரஸ்பர தகவல் பரிமாற்றுச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் உதவியை அது குறித்து உறுதி செய்யக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

# கனடாவில் கின்னஸ் சாதனை படைத்த தமிழ் மாணவி சங்கவி

யாழ்ப்பாணம் – அனலைதீவைச் சேர்ந்த பாலசிங்கம் ரதன் – வரதராஜன் வசந்தி தம்பதிகளின் இளைய புதல்வியான சிறுமி கனடாவில் கின்னஸ் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

11 வயது நிரம்பிய சங்கவி ரதன் என்ற தமிழ் சிறுமியே இந்த சாதனையை நிகழ்த்தியவராவார்.

இடுப்பில் வளையம் ஒன்றைச் சுற்றியவாறு றூபிக் கியூப்பின் கனசதுரத்தின் தனித்தனி நிறங்களை ஒரு கையினால் ஒழுங்குபடுத்தி அவர் கின்னஸ் உலக சாதனையை படைத்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி கனடா மிஸிஸாகா நகரில் கின்னஸ் சாதனை நிறுவனப் பிரதிநிதிகள் முன்னிலையில் 55 நிமிடங்களில் 30 தடவைகள் 3X3 றூபிக்கின் கனசதுரத்தினை ஒழுங்குபடுத்தி, 25 தடவைகள் என்றிருந்த முன்னைய கின்னஸ் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

கொரோனா கால முடக்கத்தில் வீட்டில் இருந்த காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தி இந்த உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

புத்தகம் ஒன்றை வாசித்தும் பல காணொலிகளைப் பார்த்தும் இதில் உள்ள நுட்பங்களைக் கற்றுத் தெரிந்து மூன்று மாதங்களாகப் பயிற்சி செய்து இவர் இதனைச் சாத்தியமாக்கியுள்ளார்.

இடுப்பில் வளையம் சுற்றுவதை தனது இள வயதில் கற்றிருந்ததும் சங்கவி இந்தச் சாதனையை நிறைவேற்ற உதவியாக இருந்தது.

புது விடயங்களைக் கற்பதில் ஆர்வமுள்ள சங்கவி இசைக்கருவி வாசித்தல், வாய்ப்பாட்டு, விளையாட்டுக்கள் என்பவற்றில் ஆர்வமாக ஈடுபட்டு வருபவர். பிறப்பின்போது ஏற்பட்ட காயம் ஒன்றினால் வலக்கரம் இயங்க முடியாத நிலையிலும் தனது இடக்கரத்தினால் இவர் இந்தச் சாதனையினை மேற் கொண்டு பலருக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

## 2020 பொதுத்தேர்தல் முடிவுகள் ஓர் பார்வை

# யானைக்கு அடிசறுக்கியது சரித்திரத்தில் முதல் தடவை




பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்
சமூகவியல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் பல திருப்பு முனைகளைச் சந்தித்துள்ளதை யாவரும் அறிந்ததே. பொதுஜன பெரமுன அமோக வெற்றியடைந்ததைப் பார்க்கிலும், ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த படுதோல்விதான் பிரபலமாகப் பேசப்படுகின்றது.
இலங்கை வரலாற்றிலே சரித்திரம் காணாத சறுக்கலை இக்கட்சி பெற்றுள்ளது. “ஆனைக்கும் அடி சறுக்கும்” என்ற பழமொழி இத்தேர்தலில் நிஜமாகி விட்டது என்றுதான் கூறவேண்டும். இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 22 தேர்தல் மாவட்டத்தில் எந்தவொரு ஆசனங்களையும் கைப்பற்றவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். காரணம் ஐக்கிய தேசியக் கட்சி எமது நாட்டின் சுதந்திர வரலாற்றுடன் தொடர்புபட்ட பாரம்பரியத்தைக் கொண்ட கட்சி என்பதை எவராலும் மறுக்க இயலாது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பாகத்தான் தோன்றியது. 1935 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது கட்சி என்று அழைக்கப்படும் லங்கா சமசமாஜ கட்சி உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிங்கள மகாசபை, இலங்கை முஸ்லீம் லீக், இலங்கை தேசிய காங்கிரஸ், இலங்கை மூர் சங்கம் ஆகியன இணைந்து 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியாக உருவாக்கப்பட்டது. நாட்டின் அரசியலில் செல்வாக்கு செலுத்தக்கூடிய இக்கட்சியில் இருந்தே எமது நாட்டினுடைய முதலா வது பிரதமரான டி.எஸ்.சேனாநாயக்க தெரிவு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1956 ஆண்டு தேர்தலில் 8 ஆசனங்களைப் பெற்று முதலாவது தோல்வியைச் சந்தித்தது. ஆனால் 2020 பொதுத் தேர்தலில் பெற்ற தோல்வியை விட இது சாதாரணம் என்றுதான் கூறவேண்டும்.

1956 ஆம் ஆண்டு தோல்வியை அடுத்து 1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி மிக பிரமாண்டமான வெற்றியை சுவீகரித்துக் கொண்டது. 168 ஆசனங்களில் 140 ஆசனங்களைத் தன்வசப்படுத்தி, ஆறில் ஐந்து பெரும்பான்மையை பெற்று சாதனை படைத்த கட்சியாகத் திகழ்ந்ததை எவராலும் மறுக்க முடியாது.

இந்தத் தேர்தலில்தான் ரணில் விக்கிரமசிங்க முதல்தடவையாக நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்தார். 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, 1987 ஆம் ஆண்டு 13 வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கையின் காணப்பட்ட தொகுதிவாரி தேர்தல் முறையை நீக்கி, தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையையும் ஐக்கிய தேசியக் கட்சிதான் அறிமுகப்படுத்தியது. அது மட்டுமல்ல எமது நாட்டில் மூன்று ஜனாதிபதிகள் (ஜே.ஆர்,ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க ஆகியோர் இந்தக் கட்சியில் இருந்துதான் தோன்றினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவரை எடுத்துக்கொண்டால், சர்வதேச விடயங்கள் பற்றி அறிந்த வித்துவானாக உள்ளார். 5 தடவைகள் பிரதமராகப் பதவி வகித்தவர். இரு தடவை ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டுள்ளார். இவருடைய காலத்தில் வெற்றி, தோல்வி காணப்பட்டாலும். இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற தோல்வியே வருந்தத்தக்கதாகும். கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற ரணிலினால் இம் முறை ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை எனக் கருதப்படும் கொழும்பு மாவட்டத்தில்கூட ஜொலிக்க முடியவில்லை. ரணில் தனது 42 வருட அரசியலில் சந்தித்த முதல் தோல்வி இதுவாகும்.. இம்முறைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மொத்தமாக 2 லட்சத்து 49 ஆயிரத்து 435 (2.15 வீதம்) வாக்குகளையே பெற்றுள்ளது. இந்த அளவு வாக்குகளைப் பெற்ற காரணத்தினால்தான் தேசிய பட்டியல் அடிப்படையில் 1 ஆசனத்தைக் கைப்பற்றி ஆறுதல் பரிசு என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களைத் தவிர்த்து ஏனைய சிங்கள மக்களைக் கொண்ட மாகாணங்களில் ஐக்கிய தேசிய கட்சி பெற்ற வாக்குகள் பின்வருமாறு அமைகின்றது. சிங்கள மக்களைக் பெருவாரியாகக் கொண்ட மாவட்டங்களிலும் வெற்றியீட்டவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தலை விட இம் முறைத் தேர்தலில் தான் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. 1931 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தலில் 22 ஆசனங்கள், 1956 ஆம் ஆண்டு தேர்தலில் 8 ஆசனங்கள், 1977 இல் 140 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

இதற்கடுத்து நடைபெற்ற தேர்தல் விகிதாசார அடிப்படையிலானதாகும். விகிதாசார அளப்படையிலான தேர்தலில், 1989ஆம் ஆண்டு 125 ஆசனங்கள், 1994 இல் 94 ஆசனங்கள், 2000 இல் 89 ஆசனங்கள், 2001 இல் 109 ஆசனங்கள், 2004 இல 82 ஆசனங்கள், 2010 இல் 60 ஆசனங்கள், 2015 இல் 106 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 2020 தேர்தலில் 1 ஆசனத்தையே பெற்றுள்ளது. இந்த ஆசனமும் தேசிய பட்டியல் மூலம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் படுதோல்விக்குக் காரணம் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு மட்டுமே எனலாம்.

| மாகாணங்கள் | தேர்தல் மாவட்டங்கள் | வாக்குகள் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 30,875 |
| | கம்பஹா | 28,282 |
| | களுத்துறை | 16,485 |
| தென் மாகாணம் | காலி | 18,968 |
| | மாத்தறை | 7,631 |
| | அம்பாந்தோட்டை | 5,017 |
| மத்திய மாகாணம் | கண்டி | 19,012 |
| | நுவரெலியா | 12,974 |
| | மாத்தளை | 6,592 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 8,254 |
| | பொலன்னறுவை | 6,225 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 26,770 |
| | புத்தளம் | 7,985 |
| ஊவா மாகாணம் | பதுளை | 9,163 |
| | மொனராகலை | 3,494 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 12,349 |
| | கேகாலை | 12,168 |

ஐக்கிய தேசிய கட்சி பிரிந்து போட்டியிட்டாதாலே இந்த நிலைமை ஏற்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களையே பெற்றுள்ளது. மிக பிரபலமான ஓர் எதிர்க்கட் சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி பிரிந்து போட் டியிடுவது ஆளும் கட்சிக்கு சாதகமாகவே அமையும். இந்நிலைமை தற்போது நடைபெற்று முடிந்த தேர்தலில் இடம்பெற்றுவிட்டது. இலங் கைக்கே சுதந்திரம் பெற்றுத் தந்த ஐக்கிய தேசிய கட்சி பரிதாப நிலைக்கு செல்வதைத் தடுக்கும் நடவடிக்கைகளினை ரணில் மற்றும் சஜித் அணியினர் கலந்துரையாடி துரநோக்குடனான செயற்பாட்டில் ஈடுபடுவதே காலத்தின் தேவையாகும்.

ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பெயர் பட்டியலை இரத்து செய்யு மாறு கோரி மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்து. ஆனால் சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது. அதுமட்டுமில்லாது பிரசார வேட்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றுமொரு தவறான செயலை செய்திருந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்புரிமை நீக்கப்பட்ட முன்னாள் உறுப்பி னர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 115 உறுப்பினர்களின் பெயர்பட்டியலை வெளியிட்டிருந்தது. ஆனால் நல்லதிலும் கெட்டது என்றது போல வெளியிட்ட குறித்த பட்டியலில் சஜித் பிரேமதாசவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இவ் வாறு உள்ளடக்கப்படாதது இப்போதைய நிலைமைக்கு சாதகம் என்றே கூற வேண்டும். இதனை கவனத்தில் கொண்டு எதிர்காலத்திலும் ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டு பயணிப்பதைத் தடுக்க முடியும்.

இறுதி தருனத்திலும்கூட ரணில் மற்றும் சஜித் தரப்பினர் ஒன்றுசேர முயற்சி எடுத்தபோதும் இம் முயற்சியும் கைகூடவில்லை. படுதோல்வியை சந்தித்த ஐக்கிய தேசிய கட்சி தனது அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து ஆழமாக ஆராய்ந்து செயற்படுவது அவசியம். தற்போதைய நிலைமையினைக் கருத்தில் கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவி தொடர்பில் ரணில் சரியான தீர்மானத்தினை எடுக்க வேண்டியது அவசியம். அத்தோடு ரணில், சஜித் தரப்பினர் ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து பிளவுபட்டு சிதைந்து சின்னாபின்னமாக போவதைத் தடுப்பதற்கு இருதரப்பு சந்திப்புக்களை நடத்துவது மிக மிக அவசியம். அப்போதுதான் பழைமை, பாரம்பரியம்மற்றும் எமது நாட்டின் சுதந்திர வரலாற்றுடன் தொடர் புபட்டு சாதனை படைத்த கட்சியினை எதிர்காலத்தில் மங்கிப்போகாத வண்ணம் கட்டிக்காப்பாற்ற முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**2020 பொதுத்தேர்தல் பற்றிய ஒருபார்வை தொடரும்.**

> ரணில் சர்வதேச விடயங்கள் பற்றி அறிந்த வித்துவானாக உள்ளார். 5 தடவைகள் பிரதமராகப் பதவி வகித்தவர். இரு தடவை ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டுள்ளார். இவருடைய காலத்தில் வெற்றி, தோல்வி காணப்பட்டாலும். இம் முறை நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற தோல்வியே வருந்தத்தக்கதாகும்.



# முதலில் 19ஐ நீக்கிய பின்னரே புதிய அரசமைப்பு உருவாக்கம்

## இப்படிக் கூறுகின்றார் பஸில்

கொழும்பு,ஓக.12
அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நிச்சயம் நீக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதனை இயற்றுவதற்கு முன்னர் நிச்சயம் 19 ஐ நீக்குவோம். அதன்பின்னர்மக்களின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு தேவையான அரசமைப்பு உருவாக்கப்படும்.

எமது அரசாங்கம் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீணடிக்கப்படமாட்டாது. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். கடந்த கால தவறுகளை திருத்திக்கொண்டு முன்னோக்கி பயணிப்போம். நாட்டை கட்டியழுப்புவதே எமது பிரதான நோக்கம். இதில் அனைவரும் இலங்கையராக இணையவேண்டும். - என்றார்.

# மாகாண சபைத் தேர்தலைக் குறிவைத்து மலையகத்தில் மலர்கிறது புதிய கூட்டணி!

கொழும்பு, ஓக.12
மலையகத்தில் விரைவில் இளைஞர்களின் பங்களிப்புடன் புதியதோர் அரசியல் கூட்டணி உதயமாகவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் தற்போது திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன எனவும், முக்கிய மூன்று அரசியல் புள்ளிகள் பச்சைக்கொடி காட்டும்பட்சத்தில் ஒக்ரோபர் ஆரம்பத்தில் கூட்டணி குறித்த அதிகார பூர்வ அறிவிப்பு வெளியாகும் எனவும் தெரிய வருகின்றது.

நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை, இரத் தினபுரி மற்றும் களுத் துறை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தியே புதிய கூட்டணியின் அரசியல் பயணம் அமையுமெனவும், பேச்சு வெற்றியளித்து கூட் டணி உதயமானால் மாகாணசபைத் தேர்தலில் புதிய கூட்டணி போட்டியிடும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

புதிய கூட்டணி பதிவுசெய்யப்படும் வரை, தேர்தல் விவகாரங்களுக்காக பதிவு செய்யப்பட்ட கட்சியொன்றை கூட்டணிக்கு வழங்குவதற்கு அரசியல் பிரமுகரொருவர் தயார் நிலையிலேயே இருக்கிறார் எனவும், அடுத்த வாரமளவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது எனவும் தெரிய வருகின்றது.

# ஞானசார தேரரின் கட்சிக்குள் குழப்பம்

கொழும்பு, ஓக.12
'எங்கள் சக்தி மக்கள் கட்சி'யின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் வெடினிகம விமலதிஸ்ஸ தேரர் இது தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுக்கு கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அதில் தாமே தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்தக் கடிதம் செல்லுபடியற்றது என்றும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குச் செல்ல பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரையே கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதாகவும் கட்சியின்தலைவர்உள்ளிட்ட குழுவினர் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் தாமே தேசிய பட்டியலின் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனக் கூறி தேர்தல் ஆணையகத்துக்குக் கடிதம் கையளித்த கட்சியின் செயலாளர் வெடினிகம விமலதிஸ்ஸ தேரரை தற்போது காணவில்லை என்று அந்தக்கட்சியின் பஹியங்கல ஆனந்த சாகர தேரர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

# ஹெரோயின் பொதி செய்த ஐவர் வசமாகச் சிக்கினர்





ஹெரோயின் போதைப்பொருளை பொதி செய்து கொண்டிருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட நிந்தவூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப் பொருளைப் பொதி செய்து கொண்டிருக்கின்றனர் என நேற்று முன்தினம் இரவு சம்மாந்துறை பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் போதைப்பொருளை பொதி செய்த நிலையில் ஐவர் கைதாகினர்.

இவ்வாறு கைதானவர்கள் 25 வயது முதல் 30 வயதுடையவர்கள் எனவும், சுமார் 1 கிராமிற்கு அதிகமான பொதி செய்யப்பட்ட போதைப்பொருள் பக்கெட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளன எனவும், இந்தப் போதைப் பொருள் பனடோல் மாத்திரையுடன் கலந்து பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் மீட்கப்பட்ட போதைப்பொருள்களுடன் சந்தேக நபர்களை நேற்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவிருந்தனர்.

# சிறுபான்மையினரில் யாருக்கு அமைச்சு?



கொழும்பு, ஓக.12
அமைச்சரவை நாளை பொறுப்பேற்கவிருக்கும் நிலையில், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. அதனால், அமைச்சுக்களை வழங்குவதில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன எனச் சொல்லப்படுகின்றது.

தற்போதுள்ள நிலைவரப் படி சிறுபான்மையினரில் இருவருக்கு மட்டும்தான் 'கபினட்' (அமைச்சரவை) அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது.

முஸ்லிம்களில் அலி சப்ரிக்கு மட்டுமே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு.

தமிழர்களில் டக்ளஸ் தேவா னந்தாவுக்கு மட்டும் அத்தகைய அமைச்சு.

அதாவுல்லா, விமலவீர வன்ஸ, எஸ்.பி. திசாநாயக்க, பிள்ளையான், ஜீவன் தொண் டமான் ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சு வழங்கப்படும். பிள்ளையான் சிறையில் இருப்பதால் இன்று பதவியேற்பாரா என்பது உறுதியாக இல்லை.

இராஜாங்க அமைச்சுப் பெயர் பட்டியலில் அங்கஜன் இராமநாதனின் பெயர் இல்லை எனச் சொல்லப்படுகின்றது. எனினும், அவருக்கு வழங்கு மாறு முன்னாள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை வைத்திருக்கிறார் என ஒரு தகவல்.

வியாழேந்திரன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோருக்கு எதுவித அமைச்சும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை

வயல்வெளிக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக் குட்பட்ட எகொடவத்த, போகொடகம, தொரகடவெல பிர தேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவ, யட்டியன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இக்கொலைக்கான காரணம் மற்றும் இக்கொலையைப் புரிந்த சந்தேகநபர் தொடர்பில் இதுவரையில் தெரியவரவில்லை எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொலைச் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விரிவான விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் முழு நிர்வாகமும் இராணுவத்தின் கைக்குள்!

## இதனை ஒருபோதும் ஏற்கமுடியாது என்கிறார் கூட்டமைப்பின் பேச்சாளர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக 11

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு செல்வது நாட்டின் முழு நிர்வாகத்தையும் இராணுவத்திடம் தாரை வார்ப்பதற்கு ஒப்பானது. எனவே, இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு இராணுவ மயப்படுத்தப்படுகின்றது என தேர்தல் காலத்தில் நாம் கூறியபோது அரசும் அரசுடன் சேர்ந்துள்ள கட்சிகளும் அதனை மறுத்தனர். ஆனால் இன்று நாட்டின் சிவில் நிர்வாத்தை மேற்கொள்ளும் அமைச்சான உள்நாட்டு அலுவல்கள் விடயம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு செல் லப்படுவது மிக மோசமான நிலைமையை ஏற்படுத்துவதோடு சகல நிர்வாக அதிகாரிகளையும் படையினர் மூலம் கட்டுப்படுத்தும் நிலைமையே ஏற்படும்.

ஒரு நாட்டின் சிவில் நிர்வாகங்களுடனேயே சர்வதேச நாடுகளும் தொடர்பை பேண விரும்புவார்கள். அந்த நிலைமை கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களுக்குக் கூட மக்கள் சென்று தமது நிலைமையை தெரிவிக்க அஞ்சும் நிலையையே புதிய அரசு தோற்றுவிக்கின்



றது. இதை சர்வதேச நாடுகளும் அறிந்துகொள்ள வேண்டும்.

இதேநேரம் வடக்கு –கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற அரச ஆதரவுக் கட்சிகளும் இதற்கு பதில் கூறியே ஆகவேண்டும். அத்தோடு இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் நிர்வாகத்தை ஒப்படைக்கும் நடவடிக்கைக்கு அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அத்தனை தமிழ் அமைச்சர்களும் கூட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டும். இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் மக்களின் நலன் சார்ந்து உரிய தரப்புக்களின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்படும் – என்றார்.

# கூட்டமைப்பை உடைக்கோம்!

## செல்வம் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஓகஸ்ட் 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளந்து, பிரிந்து நாம் செயல்படவுள்ளோம் என வெளியாகும் செய்திகள் எந்தவொரு அடிப்படையும் அற்றவை என தமி ழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இன்று மாலை தெரிவித்தார்.

கூட்டமைப்பிற்கு நாடாளுமன்றில் தேசிய பட்டியல் ஊடாக கிடைத்த ஆச னத்தை எமது சம் மதம் இன்றி வழங்கிவிட்டனர் என நாம் கூறினோம். அது உண்மைதான். ஆனால் அதனைச் சாட்டாக வைத்துக் கூட்டமைப்பை உடைக்க நாம் காரணமாக இருக்கவே மாட்டோம். அவ்வாறு நாம் எப்போது உடைவோம் என சிலர் காத்திருக்கின் றமையையும் அதற்கான முயற்சியில் முனைப்போடு ஈடுபடுபவர்கள் எம்மோடு இருந்து வெளியேறிய சிலர் என்பதனையும் நாம் நன்கு அறிவோம்.

எம்மைப் பகடையாக வைத்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவரையும் பிரிக்கலாம் என்றும், அதனால் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பக்கம் சாய்வார்கள் என்றும் தவறான தகவலை செய்தியாக அவர்கள் கொண்டோடித் திரிகின்றனர். இந்த விடயங்களில் எந்த உண்மையும் கிடையாது.

எமது கட்சியை பொறுத்த மட்டில் தமிழ் மக்களினது இருப்பிற்கும் விடிவிற்காகவும் செயற்படும் அதே நேரம் தற்போது போன்று கூட்டமைப்பில் மேலும் பலமாகவே பயணிப்போம். இதனை நான் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களிடமும் தெரிவித்துள்ளேன். – என்றார்.

### தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து

# தமிழ்க் கூட்டமைப்புடன் இனிப் பேசவேமாட்டோம்

## ராஜபக்ஷ அரசின் முக்கிய புள்ளி தினேஷ் கூறுகின்றார்



கொழும்பு, ஓக 11

தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது. எங்களுடன் இணைந்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுடனேயே நாங்கள் அது குறித்து பேசுவோம்.

– இவ்வாறு ராஜபக்ஷ அரசின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தமிழ் ஊடகம் ஒன்றுக்கு அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் நாங்களே, நாங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு இருக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு பிரிவினைவாதம் பேசிக் கொண்டிருந்த கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே நிராகரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாக்கு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் நாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அவர்களால் கூறிக்கொண்டிருக்க முடியாது. இதனால் அவர்களுடன் எங்களுக்கு பேச வேண்டிய எந்தத் தேவையும் கிடையாது.

தற்போது அரசில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்போம். முதலில் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியே முக்கியம். அதனைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

# சுபநேரத்தில் கடமைகளை பொறுப்பேற்றார் மஹிந்த



கொழும்பு, ஓக 11

பிரதமராக நான்காவது தடவையாகப் பதவி யேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ இன்று திங்கட்கிழமை முற்பகல் சுபநேரத்தில் அலரி மாளிகையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

முற்பகல் 10.36 மணியளவில் அலரி மாளிகையிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

நேற்றுமுன்தினம் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நாட்டின் 13 ஆவது பிரதமராகப் பதவியேற்றிருந்தார். நாளை புதிய அமைச்சரவை பதவி யேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை பதவியேற்பில் பிள்ளையான் பங்கேற்கார்?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக 11

கண்டியில் நாளை இடம் பெறும் அமைச்சரவை பதவிப் பிரமாணத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை அழைத்து வருவதில் சட்ட நெருக்கடி எதிர்நோக்கப்படுகின்றது.

சந்திரகாந்தன் தற்போது வரை தீர்ப்பு வழங்கப்படாத விளக்கமறியல் கைதியாகவே உள்ளமையால் வெளியே செல்லவோ அல்லது அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்வதற்கோ சட்டமா அதிபரினால் கூட அனுமதி வழங்க முடியாத சட்ட நெருக்கடியை எதிர் நோக்குகிறார் என்றும்,

இந்த நிகழ்வில் பங்கு கொள்வதற்கு அல்லது அமைச்சர் பதவியை ஏற்பதற்கு நீதிமன்றின் அனுமதி பெறப்படவேண்டும் எனவும் சட்டத்துறையை சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக சிறையில் உள்ள பிள்ளையானை வெளியில் அழைத்துச் செல்லவும் அமைச்சுப் பதவி ஏற்பதற்கான அனுமதியை நீதிமன்றில் பெறுவதற்குமான சட்ட ஏற்பாடுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னணியின் வேட்பாளருக்கு வாள்வெட்டு

அம்பாறை, ஓக 11

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோகுலராஜ் என்பவரின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அவர், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவால்களை வெல்லும் வியூகங்கள் குறித்து மு.கா. சிந்தித்தாக வேண்டும்

## கட்சியின் பிரதித் தலைவர் ஹரீஸ் தெரிவிப்பு

முஸ்லிம் சமூகத்துக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றி கொள்வதற்கான வியூகங்கள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சிந்தித்தாக வேண்டியுள்ளது என அக்கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாறை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அம்பாறை மாவட்ட மக்கள் எனக்கு மீண்டும் வழங்கிய ஆணையை மதித்து முஸ்லிம் சமூகத்தின் குரலாக நாடாளுமன்றில் என்றும் ஒலிப்பேன் என உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

அம்பாறை மாவட்ட கட்சிப் போராளிகள் என்மீது நம்பிக்கை வைத்து, இம்முறையும் கூடிய விருப்பு வாக்குகளை வழங்கி, நான்காவது தடவையாகவும் உங்கள் பிரதிநிதியாக என்னைத் தெரிவு செய்தமைக்கு மீண்டுமொருமுறை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்றும் உங்கள் சேவகனாக இருப்பேன்.

கொரோனா தொற்று சூழ்நிலையிலும் இந்தத் தேர்தலில் மக்கள், தேர்தல்கள் ஆணைக்குழு, சுகாதாரத் துறையினரின் வழிகாட்டல்களைப் பின்பற்றி, அதிலுள்ள அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது, ஆர்வத்துடன் வாக்களித்து முஸ்லிம் சமூகத்தின் குரல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டியமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது, எதிர்காலத்தில் எம் சமூகத்துக்கு ஏற்படக்கூடிய சவால்களை வெற்றி கொள்வதற்கான வியூகங்களைப் பற்றி கட்சி சிந்தித்தாக வேண்டியுள்ளது - என்றுள்ளது.

# சமயத் தலைவர்களிடம் ஆசி பெறும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 12

இந்தப் பொதுத் தேர்தலில் இரண்டு ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மதத் தலைவர்களைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்று வருகின்றனர்.

முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர் யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.

யாழ் ஆயர் இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சந்திப்பில் முன்னணியினர் சமகால மற்றும் எதிர்கால அரசியல் நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரானசெல்வராசாகஜேந்திரன் மற்றும் கட்சியின் சட்ட ஆலோசகர்களான கனகரட்னம் சுகாஷ், நடராசா காண்டிபன் உட்படக் கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதே வேளை நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்திற்குச் சென்ற மேற்படி முன்னணியின் குழுவினர் நல்லை ஆதீனக் குரு முதல்வரைச் சந்தித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டமையுடன்சமகாலநிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுகனும் பங்கு பற்றினார்.

# பேஸ்புக் ஒன்றுகூடல்; 20 பேர் சிக்கினார்கள்

## போதைப்பொருள்களுடன்

*மில்லனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லன்துடாவ பிரதேசத்தில் பேஸ்புக் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்துபசார நடவடிக்கையில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*குறித்த பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக போதைப்பொருள் பயன்படுத்தி இடம்பெற்றுக்கொண்டிருந்த விருந்துபசாரம் தொடர்பில், களுத்துறை ஊழல் ஒழிப்பு சுற்றிவளைப்பு பிரிவு அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது.*

*இதனைத் தொடர்ந்து பொலிஸாரினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது 14 ஆண்கள், 05 பெண்கள் மற்றும் குறித்த ஹோட்டலின் உரிமையாளர் ஆகிய 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இந்தச் சந்தேகநபர்களிடமிருந்து 02 கிராம் 465 மில்லிகிராம் ஹெரோயின்,13 கிராம் கஞ்சா, 05 போதை மாத்திரைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன்வழக்குப்பொருள்கள்மில்லனிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

*பண்டாரகம, மெல்லமுல்ல, தெஹிவளை, பாணந்துறை, தொடங்கொட, வெல்லன்துடாவ, யட்டியன, கடுவல, பொரலஸ்கமுவ, ஹொரணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 17, 18, 19, 20, 23, 32, 60 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்களிடம் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

# யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் தெரிவு மதிப்பீட்டுக்காக இன்று கூடுகின்றது பேரவை

யாழ்ப்பாணம்,ஓக.12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையில் - மதிப்பீட்டின் படி - முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்களை ஜனாதிபதியின் தெரிவுக்கென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்காக பல்கலைக் கழகப் பேரவையின் விசேட கூட்டம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக கடந்த மே 15 ஆம் திகதி பல்கலைக்கழகப் பதிவாளரினால் பத்திரிகைகள் மூலமாகக் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கமையக் கிடைக்கப்பெற்ற 7 விண்ணப்பங்களில் ஒன்று - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் ந. தனேந்திரனுடையது. உரிய முறைப்படி நிரப்பப்படாத காரணத்தினால் அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் துணைவேந்தரும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி, மருத்துவ பீடாதிபதி வைத்திய நிபுணர் எஸ். ரவிராஜ், விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும், கணிதப் புள்ளி விவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, புள்ளி விவரவியல் துறைப் பேராசிரியர் செ. இளங்குமரன் ஆகியோரின் விண்ணப்பங்கள் மதிப்பீட்டுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பேராசிரியர் அபே குணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆறு பேரிலிருந்து ஐந்து பேரைத் தெரிவு செய்வதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட மூவருடன், பல்கலைக் கழக மூதவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பேரவையினால் முன்மொழியப்பட்ட இருவரையும் கொண்ட, மதிப்பீட்டுக்குழு இன்று காலை கூடவிருக்கிறது. இந்த மதிப்பீட்டுக்குழு ஒவ்வொரு விண்ணப்பதாரிகளாலும் தனித்தனியாக குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் அளிக்கைகளையும் மதிப்பீடு செய்த பின்னர், ஆறு பேரில் இருந்து திறமை அடிப்படையில் புள்ளிகளைப் பெறும் ஐந்து பேரது விவரங்களைப் பேரவை உறுப்பினர்களின் மதிப்பீட்டுக்காக இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கும்.

மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களால் ஒவ்வொரு விண்ணப்பதாரிகளும், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் - ஒவ்வொரு விண்ணப்பதாரிகளையும் சுற்றறிக்கையின் படி தனித்தனியாக மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்குவர். இந்த மதிப்பீடு இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளது.

சுயாதீன மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகள், பேரவை உறுப்பினர்களின் தனித்தனி மதிப்பீட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் திறமைப் பட்டியல் பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நாளைய தினமே அனுப்பி வைக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஊடாகத் தனது சிபார்சை ஜனாதிபதிக்கு முன்வைக்கும். 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி, ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த மூவரில் இருந்து ஒருவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தெரிவு செய்து நியமிப்பார்.

இதே நேரத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த காலங்களில் தனக்கெதிராகப் பல ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்துத் தன்னைப் பழி வாங்கும் வகையில் செயற்பட்டதனால், துணைவேந்தர் தெரிவிலும் தான் வேண்டுமென்றே பழிவாங்கப்படலாம் என்பதால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தனக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பதாரிகளுள் ஒருவரான பேராசிரியர் செ. இளங்குமரன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுக் கோரிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் காரணம் எதுவும் கூறப்படாமல் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின் துணைவேந்தருக்கான அதிகாரங்களுடன் கடந்த வருடம் மே மாதம் முதல் மூன்று மாத காலத்துக்கு வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்ட பின்னர் துணைவேந்தர் தெரிவுக்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும், கடந்த நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக அந்தப் பணிகளைப் பிற்போடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டதுக்கமைய தெரிவு பிற்போடப்பட்டிருந்தது. அதன் பின் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், பல்கலைக்கழகங்களின் பேரவைகளும் செயலிழந்ததன் காரணமாக இழுபறிப்பட்ட துணைவேந்தர் தெரிவு, கடந்த பெப்ரவரி மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய ரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் பேராசிரியர் க. கந்தசாமிக்குத் தகுதி வாய்ந்த அதிகாரியாக மூன்று மாதங்களுக்கொரு முறை நியமனம்நீடிக்கப்பட்டுவந்தமையும்குறிப்பிடத்தக்கதாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்ற ‘ஒன்லைன்’ விண்ணப்பத்தை அலரிமாளிகையில் பூர்த்திசெய்தார் மஹிந்த



## ஏனையோருக்கு 15ஆம் திகதிக்கு முன் தகவலைப் பூர்த்திசெய்ய அறிவுறுத்தல்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று அலரிமாளிகையில் உத்தியோகபூர்வமாகப் பணிகளைப் பொறுப்பேற்று சிறிது நேரத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தில் தனது தகவல்களைப் பூரணப்படுத்தி நாடாளுமன்றச் செயலகத்துக்குச் சமர்ப்பித்துள்ளார்.

பிரதமரினால் ஒன்லைன் விண்ணப்பப் படிவம் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி ஜயதிலக உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று கலந்துகொண்டது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் தகவல்களை ஒன்லைன் முறையில் பெற்றுக்கொள்ளும் முறையொன்று நாடாளுமன்ற செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுதாரணமாக அமையும் வகையில் பூரணப்படுத்திக் கையளித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் நிலைமை காரணமாக தற்போது நாடாளுமன்றத்தினுள் காணப்படும் தகவல் தொழிநுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி ஒன்லைன் மூலம் தகவல்கள் திரட்டப்படுவதுடன், இதன்மூலம் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் தேர்தல் தொகுதிகளில் இருந்தே இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் **registration.parliament.lk** எனும் இணையப் பக்கத்துக்கு பிரவேசித்து உரிய கடவுச்சொல்லை பயன்படுத்தி இந்த விண்ணப்ப படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கடவுச்சொல் தொடர்பில் அறிவுறுத்துவதற்கு நாடாளுமன்ற பணியாள்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்வதற்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்களின் தரவுகள் கட்டாயம் தேவைப்படுவதுடன் முடிந்தளவு விரைவில் அவற்றை வழங்குமாறு நாடாளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் வழங்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்தல் விடுத்துள்ளார்.

# ரஷ்யப் பிரஜை ஒருவர் தலைமன்னாரில் கைது

**(தலைமன்னார் நிருபர்: வாஸ் கூஞ்ஞ)**

ரஷ்யப் பிரஜை ஒருவர் தலைமன்னார் பகுதிக்குச் சுற்றுல்லாப் பயணியாக வந்திருந்தபொழுது தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரின் விசா காலாவதியானதே இதற்குக்காரணம்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-


ரஷ்யப் பிரஜை ஒருவர் சுற்றுல்லாப் பயணியாக கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வந்துள்ளார். ஆனால் கொரோனா காரணமாக இந்நபர் இலங்கையை விட்டு தனது நாட்டுக்குப் போக முடியாத நிலையில் திங்கள் கிழமை தலைமன்னார் பகுதிக்கு சுற்றுல்லா நோக்குடன் வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரைப் பரிசோதித்த தலைமன்னார் பொலிஸார் இவரின் விசா காலாவதியானதைத் தொடர்ந்து இந்நபரை கைது செய்து அன்றையத் தினமே மன்னார் நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இந்தச் சந்தேக நபரை தலைமன்னார் பொலிஸில் தனிமைப்படுத்தி வைக்குமாறும் மீண்டும் இன்று புதன் கிழமை(12 ஆம் திகதி) மன்றில் ஆஜர்படுத்து மாறும் பதில் நீதிவான் கட்டளைப் பிறப்பித்துள்ளார்.

இச்சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி எஸ். டினேசன் மற்றும் சர்மிளன் டயஸ் ஆகயோர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

# கைதைத் தடை செய்யுமாறு கோரி குருநாகல் மேயர் மனு



தன்னைக் கைதுசெய்யுமாறு குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிடிக்கப்பட்ட பிடியாணையை இடைநிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், குருநாகல் மாநகர சபை மேயர் துார சஞ்சீவ மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தொல்பொருள் மதிப்புமிக்க குருநாகல் புவனேக ஹோட்டல் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பில், குருநாகல் மாநகர சபை மேயர் துார சஞ்சீவ உள்ளிட்ட 05 சந்தேகநபர்களுக்கு எதிராக குருநாகல் நீதிவான் நீதிமன்றம் மீண்டும் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அவர்களைக் கைதுசெய்வதற்காக இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நடைமுறைப்படுத்த குருநாகல் பொலிஸார் தவறியமை காரணமாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த பிடியாணை மீண்டும் பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, குறித்த சந்தேகநபர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கும் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# ரணில் விலகவுமில்லை செயற்குழு கூடவுமில்லை

## கொழும்பு செய்தி வட்டாரம் தகவல்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பதவி தொடர்பில் கட்சியின் உயர்மட்டத்துடன் தலைவர் ரணில்விக்கிரமசிங்க எந்த உடன்பாட்டிற்கும் வரவில்லை என ஐக்கியதேசிய கட்சி வட்டாரங்களைமேற்கோள்காட்டிகொழும்பு கசட் செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில்விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் இதனை தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் ஐக்கியதேசிய கட்சியின் செயற்குழு கூடவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கியதேசியகட்சியின்சிலசிரேஷ்ட தலைவர்கள் ஒன்றுகூடி ரணில்விக்கிரமசிங்க தலைவர் பதவியிலிருந்து விலக தீர்மானித்துவிட்டார் என அறிவிக்க தீர்மானித்தனர் என ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரவிகருணாநாயக்க, தயாகமகே, வஜிரஅபயவர்த்தன, அகிலவிராஜ்காரியவசம் ஆகியோர் தங்களைக் கட்சி தலைவர் பதவிக்கு பிரே ரரிப்பதற்கு தீர்மானித்துள் ளனர். அவர்கள் இன்று ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்து இது குறித்த யோசனையை முன்வைக்கவுள்ளனர் எனவும்ரணில்விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெள்ளிக்கிழமை ஐக்கியதேசிய கட்சியின் செயற்குழு கூட்டத்திலேயே இது குறித்த முடிவெடுக்கப்படும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இறுதிப்போரில் காணாமல்போன மகனைத் தேடிய தாய் உயிரிழப்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மற்றுமொரு தாயார் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு - மாணிக்கபுரம் விசுவமடு பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய மைக்கல் ஜேசு மேரி என்பவரே உயிரிழந்துள்ளார்.

2009ஆம் ஆண்டு, மாத்தளன் பகுதியில் தனது மகனான மைக்கல் ஜோசப் என்பவர் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், தன்னுடைய மகனைத் தேடி தொடர்ச்சியாக முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் இவர், நேற்று சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில், இந்தத் தாயாருடன் தமது உறவுகளைத் தேடி வந்த 18 உறவுகள் உயிரிழந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியத்தை இழந்த முன்னாள் எம்.பிக்கள்!

இலங்கையின் 08ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த 27 பேர் ஓய்வூதியம் கிடைக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு முதல் தடவையாக நாடாளுமன் றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த வாய்ப்பை இழந்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் 5 வருடங்களைப் பூர்த்தி செய்யும் உறுப்பினர்கள் நாடாளுமன்ற ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவார்கள். ஆயினும், இம் முறை நாடாளுமன்றம் நான்கரை வருடத்தில் கலைக் கப்பட்டதோடு, மீண்டும் குறித்த 27 பேரும் நாடாளுமன் றத்திற்குத் தெரிவாகாத நிலையில், அவர்கள் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

**ஐக்கிய தேசிய முன்னணி**

1. மலிக் சமரவிக்ரம
2. ஹிருணிகா பிரேமச்சந்திர
3. சத்துர சேனாரத்ன
4. ஆனந்த அலுத்கமகே
5. பந்து லால் பண்டாரிகொட
6. சந்திம கமகே
7. கருணாரத்ன பரணவிதான
8. தயா கமகே
9. ஆஷு மாரசிங்க
10. சமன் ரத்னபிரிய
11. நடராஜா திலகேஷ்
12. மொஹமட் மன்சூர்
13. சிசிர குமார
14. நாலக கொலொன்ன
15. துசித விஜேமான்ன
16. சந்தீப் சமரசிங்க
17. மொஹமட் நவவி
18. மொஹமட் சல்மான்
19. மயந்த திஸாநாயக்க
20. பேராசிரியர் ஜயம்பதி விக்ரமரத்ன

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**

21. நிரோன் பிரேமரத்ன
22. மனோஜ் சிறிசேன
23. மலித் ஜயதிலக (தேசியப் பட்டியல்)

**மக்கள் விடுதலை முன்னணி**

24. நலிந்த ஜயதிஸ்ஸ

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

25. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா
26. சிவப்பிரகாம் சிவமோகன்
27. கவீந்திரன் கோடீஸ்வரன்

# தேசியப் பட்டியல் விவகாரம் மு.காவிலும் சூடு பிடிக்கிறது

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவகாரம் சர்ச்சைக்குரியதாகி சூடுபிடித்திருக்கம்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தாருஸ்ஸலாம் தலைமையகம் கடந்த சில தினங் களாக, வடகிழக்கு மாவட்டங்கள் மற்றும் ஏனைய சில மாவட்டங்களையும் சேர்ந்த கட்சி ஆதரவாளர்களின் வருகையால் நிரம்பி வழிந்தது.

குறிப்பாக, நடந்து முடிந்த இந்த பொதுத் தேர்தலில், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ள தொகுதிகளிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் தீவிர ஆதரவாளர்கள் குழுக்களாகவும் சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் சகிதமும் கட்சித் தலைமையகத்திற்கு வந்து கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து தேசியப் பட்டியலில் இடம்பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்தனர் எனக் கூறப்படுகிறது

9ஆவது புதிய நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னதாக மிகவும் முக்கியமானவையாக கருதப்படும் இந்த நாள்களில் தலைமையகத்திற்கு வந்து செல்லும் தலைவர் ஹக்கீம், தம்மிடம் விடுக்கப்பட்டுவரும் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்து வருகின்றனர். கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மற்றும் தமது கட்சி முக்கியஸ்தர்களுடனும் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கட்சித் தலைமையகத்தில் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது .

# மேர்வினின் மகன் மாலக சில்வாவை வலைவீசி தேடுகின்றனர் பொலிஸார்



பத்தரமுல்லவை சேர்ந்த ஒரு தொழிலதிபருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவை கைது செய்ய சிறப்பு பொலிஸ் குழு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

மாலக சில்வாவை கைது செய்ய தலங்கம காவல்துறையின் அதிகாரிகள்குழு நேற்றுமுன்தினம்நுகேகோடாவில் உள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இல்லத்திற்குச் சென்றனர்.

இருப்பினும், மேர்வின் சில்வா மற்றும் அவரது மகன் மாலக சில்வா ஆகியோர் அந்த நேரத்தில் வீட்டில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேர்வின் சில்வாவின் தேர்தல் பிரசாரத்திற்கு நிதியளிக்குமாறு வற்புறுத்தி பத்தரமுல்லவைச் சேர்ந்த ஒரு தொழிலதிபருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் மாலக்க சில்வாவைக் கைது செய்யக் காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கையெடுத்துள்ளனர்.

பத்தரமுல்லையில் வசிக்கும் மீன் வர்த்தகர் ஒருவரிடம் ஆரம்பத்தில் மாலக சில்வா 100,000 ரூபா தேர்தல் நிதி கோரியுள்ளார். மாலக சில்வா தனது நண்பராக இருந்த தொழிலதிபரை ஜூன் 09 அன்று ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் தனது தந்தையின் தேர்தல் பிரச்சாரத்திற்கு நிதியளிக்குமாறு கோரினார் எனக் கூறப்படுகிறது.

கொவிட் - 19 தொற்றுநோயால் தனது வணிகம் நஷ்டத்தில் இயங்குவதாகவும், உரிய நேரத்தில் நிதி வழங்குவதாகவும் தொழிலதிபர் மாலக சில்வாவுக்கு தெரிவித்திருந்தார்.

அதன்பின்னரே அவருக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

# அருட்பணி தேவராஜா காலமானார்

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குரு அருட்பணி. ஜே.வி.தேவராஜா தனது 90 ஆவது வயதில்நேற்றுமுன்தினம் காலமானார்.

அவரது பூதவுடல், மன்னார் ஆயர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நேற்றுக் காலை 8 மணியளவில், அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலியுடன் மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பேராசிரியர் தம்மிக காலமானார்



பேராசிரியர் தம்மிக கங்கா நாத் தனது 62ஆவது வயதில்இன்றுகாலமானார்.

இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிங்களம் மற்றும் வெகுஜன ஊடகக் கற்கைப பிரிவின் முன்னாள் தலைவராகவும் ஜப்பானுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவராகவும் சேவையாற்றியுள்ளார்.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இவர் காலமாகியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# டிராக்டர் கவிழ்ந்ததில் சிறுமி உயிரிழப்பு

அக்கரைபற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலங்குளம் வீதியில் டிரக்டர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்த விபத்தில் 8 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் டிரக்டர்சாரதி மற்றும் அதில் பயணித்த சிறுமிகள் இருவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்அக்கரைபற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி ‘காலைக்கதிர்’ நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விபரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங்...... என்னும் திருவருட்பயன் காப்புச் செய்யுளில் குறிப்பிடப்படுபவர் யார்?**

..............................................................................................

**2. பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தல விருட்சம் எது?**

..............................................................................................

**3. இராஜராஜஸ்வரம் என்று அழைக்கப்படும் ஈழத்துச் சிவாலயம் எது?**

..............................................................................................

**4. இலங்கையில் கண்ணகி அம்மன் வழிபாடு சிறப்பாக உள்ள மாவட்டம் எது?**

..............................................................................................

**5. நல்லூர் வெண்பா வை எழுதியவர் யார்?**

..............................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

10

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..............................................................................
2. பிறந்த திகதி :..............................................................................
3. கல்வி கற்கும் தரம் :.....................................................................
4. பாடசாலை :..................................................................................

..............................................
கையொப்பம்





நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 18 ஆம் நாளான நேற்று, மாலை உற்சவத்தின் போது, வள்ளி, தெய்வானை சமேதரராக முருகப் பெருமான் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும், நேற்று மாலை இடம்பெற்ற அருணகிரிநாதர் உற்சவக் காட்சியையும் படங்களில் காணலாம்

**படங்கள் : ஐங்கரன் சிவசாந்தன்**

# காணாமல் போனவர் எனத் தெரிவிக்கப்படும் ‘அபே ஜனபல’ கட்சி செயலர் கேகாலையில்?

காணாமல் போனார் எனத் தெரிவிக்கப்படும் எமது மக்கள் சக்தி (அபே ஜன பல) கட்சியின் பொதுச் செயலாளர் வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் கேகாலை மாவனெல்ல உதுவத்கந்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

இந்த தகவல் கிடைத்தவுடன் ஊடகம் ஒன்றின் செய்தியாளர் நேற்றிரவு (10) அங்கு சென்றிருந்த நிலையில் தேரர் அங்கு இருக்கவில்லை.

அபே ஜன பல கட்சியின் கேகாலை மாவட்ட செயலாளரும் கடந்த தேர்தலில் போட்டியிட்டவருமாகிய ஏ.டீ.வசந்த வுக்கு சொந்தமான வீட்டிலேயே அவர் தஞ்சம் புகுந்திருந்தார் எனத் தெரியவந்தது.

இதன்போது கருத்து தெரி வித்த வசந்த, வெதினிகம தேரர் குறிந்த இடத்திற்கு வருகை தந்தார் எனக் கூறினார்.

தேரர் தடுமாற்றத்துடன் தமது இல்லத்திற்கு வந்தார் எனவும் தனக்கு உயிரச்சுறுத்தல் இருப்ப தாக தேரர் கூறினார் எனவும் ஏ.டீ.வசந்த தெரிவித்தார்.

“தன்னைச் சிலர் ஜீப் ஒன்றில் பின்தொடர்ந்தனர் எனவும் இரண்டு மூன்று தடவைகள் தன்னை பிடிக்க முயற்சித்தனர் எனவும் அவர் கூறினார். அதிலிருந்து தப்பியே தேரர் எனது வீட்டுக்கு வந்தார்.

காலை 8.30மணிக்கு இராணுவத்தினர் வந்தனர். அதன் பின்னர் 119 இற்கு தகவல் கிடைத்தாகத் தெரிவித்து பொலிஸார் வந்து வீட்டைப் பரிசோதித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தேரர் அங்கு இருக்கவில்லை.

எவ்வாறாயினும் அதிகாரமு டைய ஒருவர் இந்த பிரச்சினையில்தலையிட்டால்இதனைதீர்த்துக்கொள்ள முடியும்.” - என்றார் அவர்.

நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அபே ஜன பல கட்சி சார்பில் ஒரேயொரு தேசியப்பட் டியல் உறுப்பினர் நாடாளுமன் றத்திற்கு தெரிவானார்.

அதற்கு கலகொட அத்தே ஞானசார தேரரின் பெயர் பரிந்து ரைக்கப்பட்டது.

இந்த நிலையில் வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் தான் நாடா ளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தெரிவானார் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலம் அறிவித்தமையை அடுத்தே இந்தப் பிரச்சினை பூதாகரமாகியது.

எனினும் ஞானசார தேரர் தேசியப்பட்டியல் மூலம் நாடாளு மன்றத்திற்கு தெரிவு செய்யப் பட்டமை தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளரே அறிவிக்க வேண்டும் எனவும், ஆனால் வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் காணாமல் போயுள்ளார் என வும் பஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.



# யுவதியை மீட்க ஏரியில் குதித்த இளைஞர் நீரில் மூழ்கி மாயம்

பண்டாரகம - பாணந்துறை வீதியின், பொல்கொட பாலத்தில் இருந்து கங்கையில் குதித்து தற்கொலை செய்துக் கொள்ள முயற்சித்த யுவதி ஒருவரை காப்பாற்ற முயற்சித்த நபரொருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கங்கையில் குதித்த பெண், நீரில் மூழ்கிக்கொண்டிருந்த போது பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டு பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் உறவுமுறை சகோதரர் ஒருவரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

29 வயதுடைய, கெமுனு மாவத்தை, வெல்லன் துடுவ, பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தற்கொலைக்கு முயற்சித்த பெண் நபரொருவருடன் காதல் தொடர்பில் இருந்த நிலையில் அவரிடம் இருந்து பிரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக குறித்த நபர் அப்பெண்ணுடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பேஸ்புக்கில் பதிவேற்றியுள்ளார்.

அவமானத்தில் குறித்த பெண் தற்கொலை செயதுக் கொள்ள தீர்மானித்துள்ள நிலையில் அவரின் உறவுமுறை சகோதரர் ஒருவருக்கு கைப்பேசியில் அழைத்துத் தான் தற்கொலை செய்துக் கொள்ளப் போகிறர் எனத் தெரிவித்து, குறித்த பாலத்தில் இருந்து குதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த குறித்த உறவுமுறை சகோதரர் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணைக் காப்பாற்றுவதற்காக கங்கையில் குதித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் நீரில் மூழ்கி காணாமல் போன நபரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்

சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘தமிழ் நிலம்’ மக்கள் அமைப்பின் தலைவரான முன்னாள் போராளி மீது கொடூரத் தாக்குதல்!

வவுனியாவில் இனந்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியதில் முன்னாள் போராளியொருவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளியும், சமூக சேவகரும், ’தமிழ் நிலம்’ மக்கள் அமைப்பின் தலைவருமான வி.விநோதரன் என்பவர் மீதே இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா கரப்பன்காட்டு பகுதியில் அமைந்துள்ள தமிழர் நிலம் மக்கள் அமைப்பின் அலுவலகத்திற்குள் நேற்று முன்தினம் இரவு உட்புகுந்த மர்மநபர்கள் முன்னாள் போராளி மீது சராமரியாகத் தாக்குதல் நடத்தியமையுடன் அலுவலகத்தில் இருந்த ஐம்பதாயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

முன்னாள் போராளி மீதான தாக்குதல் தொடர்பாக அயலவர்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதுடன், நோயாளர் காவுவண்டி மூலம் படுகாயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



வவுனியாவில் தாக்குதலுக்குள்ளான முன்னாள் போராளி வன்னி பகுதி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஊடாக மனிதாபிமான சேவைகள் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## போர்க்குற்றச்சாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்த அழுத்தங்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கும்போதே அவர் மேற்கண்டவாறுகூறினார். அவர்மேலும்தெரிவித்ததாவது:-

ஜெனிவா தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எந்தவொரு கட்டாயமும் எந்தவொரு நாட்டுக்கும் இல்லை. ஆனால், நல்லாட்சி அரசு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலமாக வலுக்கட்டாயமான தலையீடுகள் ஏற்பட்டன. எமது இராணுவத்தை சர்வதேச அரங்கில் தண்டிக்கும் நிலைமைக்குக் கொண்டு சென்றனர். அவர்களின் ஆட்சி தொடர்ந்திருந்தால் இன்று எமது இராணுவத்தினர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்க முடியாது. இராணுவத்தைக் கைதுசெய்து சிறையில் அடைக்கும் நிலைமையே உருவாகியிருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிப் பயங்கரவாதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து நாட்டில் இராணுவத்தின் கரங்களைக் கட்டிப்போட்டுவிட்டு விடுதலைப்புலிகளையும், கடற்புலிகளையும் சுதந்திரமாக செயற்பட வைத்தவர்கள் மீண்டும் 2015இல் ஆட்சிக்கு வந்தவுடனும் அதே புலிப் புராணத்தையே பாட ஆரம்பித்தனர்.

இவற்றையயல்லாம் மனதில் வைத்துக்கொண்டே நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோம்.

சிங்கள, பௌத்த நாட்டில் பௌத்த, சிங்களத்தை அழிப்பதை எம்மால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இன்று நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம்; அதிகாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இப்போது நாம் நாட்டின் சிங்கள, பௌத்த கொள்கையைப் பாதுகாப்போம். அதேபோல் எமது இராணுவத்தைப் பாதுகாக்கும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம் - என்றார்.

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்...)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2020 இல் வெளியிடப்பெற்றது.